| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.ராஜாராம் | அ.வ.எண். 290/2018 | 15.06.2026 |

குறுக்கு விசாரணை

1) பி.சா.ஆ.3 புல வரைபடத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்தது நான் தான் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை என்னிடம் கொடுத்தது யார் என்றால் இலால்குடி வட்டாட்சியர். பி.சா.ஆ.3 புல வரைபடத்தில் கண்ட தெரு பகுதி புல எண்.318/33 என்றால் சரிதான். 15.09.2023 ல் புல எண்.318/33 உள்ள தெருவை முழுவதுமாக அளவீடு செய்தோம் என்றால் சரிதான்.

2) யார் முன்னிலையில் அளவீடு செய்தோம் என்றால் புள்ளம்பாடி செயல் அலுவலர், புள்ளம்பாடி வருவாய் ஆய்வாளர், புள்ளம்பாடி கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் முன்னிலையில் நில அளவையர் அளவீடு செய்தார். நிலஅளவையர் பெயர் என்ன என்றால் தெரியாது. பி.சா.ஆ.3 புல வரைபடத்தில் நில அளவையர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை வட்டாட்சியர் அலுவலகத்தில் கேட்டால் தான் தெரியும்.

3) புல எண்.318/33 தெருவானது புல எண்.318/36 நிலத்தில் உரிமையாளரால் மட்டுமே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளதற்கு காரணம் என்ன என்றால் தங்கவேல் மனு கொடுத்ததின் பேரில் அளந்த போது ஆக்கிரமிப்பு இருந்ததால் ஆக்கிரமிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு தெருவில் ஆக்கிரமிப்பு இருந்தால் மேற்படி ,தெரு முழுவதும் அளவீடு செய்யப்பட்டு, அதில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் கண்டறியப்படும் என்றால் சரிதான், தெரு முழுவதும் அளவீடு செய்யப்படும் ஆனால் ஆக்கிரமிப்பு குறித்து வட்டாட்சியர் தான் முடிவு எடுக்க வேண்டும்.

4) புல எண்.318/33 தெருவில் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் பி.சா.ஆ.3 நில வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை, புகார் கொடுக்கப்பட்ட பகுதிக்கான ஆக்கிரமிப்பு மட்டுமே காட்டப்பட்டுள்ளது. யார் புகார் கொடுத்ததின் பேரில் புல எண்.318/33 தெரு அளக்கப்பட்டது என்றால் தங்கவேல். மேற்படி தங்கவேலுக்கும், வாதி சித்ராவிற்கும் இடையே இலால்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வரும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, இவ்வழக்கு மட்டுமே தெரியும். மேற்படி தங்கவேலு இது தொடர்பாக எத்தனை முறை எங்களது அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளார் என்றால் 2 முறை.

5) மேற்படி தங்கவேலு புல எண்.318/33 தெரு முழுவதையும் அளக்க கோரியே மனு செய்தார் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 புல வரைபடம் நகல் என்றாலும், நில அளவையர் என்னிடம் கொடுத்த புல வரைபடம் பி.சா.ஆ.3 அல்ல என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.3 புல வரைபடத்தில் கண்ட நீலம், பழுப்பு வர்ணமிட்ட ஆக்கிரமிப்பு பகுதிகள் நில அளவையரால் குறிப்பிட்டவை அல்ல என்றால் சரியல்ல. மேற்படி நில அளவையரை விசாரித்தால் அதன் உண்மை தன்மை நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்றால் சரிதான். நான் வாதி தங்கவேலுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/— ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2026.06.16 06:14:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.